www.boomiirjt.com Volume 2, Issue 2 Apr – Jun 2026 E - ISSN: 3139 -1893

BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893 An international open access, peer- reviewed, refereed journal

# தமிழ் இலக்கியம் உணர்த்தும் விளையாட்டுகள்
# Tamil Ilakkiyam Unarthum Vilaiyaattugal

முனைவர். மணிகண்டன், சே.

தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் – 641029

**Dr. Manikandan S.**

Assistant Professor of Tamil, Kongunadu Arts and Science College, Coimbatore – 641029, Tamilnadu, India

Email: manikandan.tsa1992@gmail.com

**Abstract**

The Tamil language holds a unique and prestigious position among the languages of the world, embodying profound values of culture, civilization, morality, righteousness, devotion, and philosophy. The grammatical text Purapporul Venba Maalai proudly proclaims the ancient heritage of the Tamil people through the famous lines: "The ancient community that emerged with swords before stones and soil had even appeared."

The Tamil language, rooted in such an ancient civilization, encompasses every virtue essential for human society, as evidenced through its rich grammar and literature. Originating from this land, the Tamil people nurtured diverse arts and excelled in various fields. In the realm of sports, they entertained themselves and others through traditional games. Today, these traditional sports have reached advanced stages, adapting to various modern rules and development phases, thereby contributing significantly to the nation's progress and success.

This research paper explores the conceptual meaning of sports celebrated through the ages, classifies the types of games mentioned across various periods of Tamil literature, and highlights the benefits derived from playing them. Ultimately, this paper is structured as a comprehensive study on the theme of "Sports as Reflected in Tamil Literature."

**Keywords**: Sports, Tamil Literature, Tradition, Emotions, and Ancient Tamils.

**ஆய்வுச் சுருக்கம்**

உலக மொழிகளில் தனிச்சிறப்பினைப் பெற்று பண்பாடு, நாகரிகம், ஒழுக்கம், அறம், பக்தி, தத்துவம் முதலிய அனைத்து சிறப்புகளையும் கொண்ட மொழி தமிழ் மொழி.

*“கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே*
*வாளோடு முன் தோன்றிய மூத்த குடி”*

என்று புறப்பொருள் வெண்பா மாலை என்ற இலக்கண நூல் தமிழ் மொழியினைப் பறை சாற்றுகின்றது. இப்படி ஆதிக் குடியைக் கொண்ட தமிழ் மொழியில் மனித சமுதாயத்திற்குத் தேவையான அத்துணை சிறப்புகளும் சொல்லப்பட்டுள்ளன. அவைகளைத் தமிழ் இலக்கண, இலக்கியங்களின் மூலமாக அறியலாம். இவ்வாறு தமிழ் மண்ணில் தோன்றிய மனிதன் அனைத்து கலைகளையும் வளர்த்து பல்துறைகளில் தன்னை முதன்மைப்படுத்திக் கொண்டான். அந்த வகையில் விளையாட்டுத் துறையிலும், பாரம்பரிய விளையாட்டுகளைக் கொண்டு தன்னையும் பிறரையும் மகிழ்வித்துள்ளான். பாரம்பரிய விளையாட்டுகள் பல்வேறு நிலைகளில் உயர்நிலைகளை அடைந்து இன்று நாட்டின் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் வழிவகை செய்கின்ற அளவில் விளையாட்டுகள் பல்வேறு விதிகளையும் வளர்ச்சி நிலைகளையும் அடைந்துள்ளது. காலம் காலமாக் கொண்டாடும் இவ்விளையாட்டின் தமிழ் பொருள் விளக்கம், காலந்தோறும் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் சொல்லப்பட்ட விளையாட்டுகளின் வகைப்பாடுகள், விளையாட்டின் மூலமாக கிடைக்கும் நன்மைகள் முதலியவைகளை ஆராய்ந்து தமிழ் இலக்கியம் உணர்த்தும் விளையாட்டுகள் என்ற பொருண்மையில் கட்டுரையாக அமைக்கப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** விளையாட்டு, தமிழ் இலக்கியம், பாரம்பரியம், உணர்வுகள், பழந்தமிழர்.

**முன்னுரை**

தமிழ் மண்ணின் பெருமையை உலகறியச்செய்ய அந்தந்த காலத்திற்கு ஏற்ப பல்வேறு புலவர்களும் பல்வேறு அறிஞர்களும் தோன்றி கொண்டே இருந்தனர். இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்த மக்கள் நில அமைப்புகளின் மூலமாகவும், தொழில் அடிப்படையிலும், நம்மால் அறிய முடிகின்றது. தமிழர் சமூகம் கலைகளுக்கும் அவை தொடர்பாய் வந்த அனைத்துற்கும் முக்கிய சிறப்பிடங்களை கொடுத்துள்ளது. அந்த வகையில் அனைத்து தமிழ் இலக்கியங்களிலும் சொல்லப்பட்டுள்ள விளையாட்டு முறைகளைப் பற்றி இங்கு தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இந்த விளையாட்டு முறைகள் இன்றளவில் எவ்வாறு வளர்ச்சி அடைந்து உள்ளது என்பது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

**விளையாட்டின் தமிழ் பொருள் விளக்கம்**

விளையாட்டு என்பது சில வேளைகளில் கற்பித்தல் நோக்கத்திற்காக நடத்தப்படும் கட்டமைப்புக் கொண்ட ஒரு செயல்பாடாகும். விளையாட்டு சில சமயங்களில் வேலை என்பதுடன் தொடர்புடையது போல் காணப்படுகிறது. ஆனால், வேலை ஊதியத்திற்காகச் செய்யப்படுவது. விளையாட்டு ஒரு கலை என்றும் குறிப்பிடப்படுவது உண்டு. ஆனால் கலையைப் போல் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒன்றாக விளையாட்டு இருப்பதில்லை. இருந்தாலும், எப்போதும் இவற்றுக்கு இடையேயான எல்லைகள் தெளிவாக இருப்பதில்லை. தொழில்முறை விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு வருமானத்திற்கான ஒரு தொழிலாகவே உள்ளது. பாரதியார் விளையாட்டு என்ற சொல்லின் தனிச்சிறப்பை விளக்கும் விதமாக, குழந்தைகளுக்குப் புரியும் வகையில் கவி இயற்றியுள்ளார். இதனை,

*"ஓடி விளையாடு பாப்பா – நீ*
*ஓய்ந்திருக்க லாகாது பாப்பா*
*கூடி விளையாடு பாப்பா" (பாரதியார் கவிதைகள் பா.எண்:12)*

என்ற வரிகளின் மூலமாக உணரலாம்.

விளையாட்டு அனைத்து மனிதர்களும் இயல்பாக விரும்பி ஈடுபடும் செயல்பாடுகளில் ஒன்று. இது ஒருவரின் ஆக்கச்சிந்தனையை அதிக அளவில் வெளிப்படுத்தும் செயலாகும். விளையாட்டு என்பதற்குத் தமிழ்ப் பேரகராதி (Tamil Lexicon) ஐந்து பொருளைத் தந்துள்ளது. அவை:பொழுதுபோக்கிற்குரிய மகிழ்ச்சிச் செயல், சிரமமின்றி எளிதாகச் செய்யும் செயல்,வேடிக்கை,கலைத்தொழில் எட்டனுள் பாட நினைத்த வண்ணத்தில் சத்தத்தை விடுகை என்பனவாகும். (Tamil Lexicon, Vol. VI, part – I, P. 3730). விளையாட்டு என்பதற்குத் தமிழ் சொற்களஞ்சியம் நான்கு பொருளைத் தந்துள்ளது. அவை: ஆட்டம் (Play),போட்டி விளையாட்டு (Games),வன்மை விளையாட்டு (Sports),இன்பப் பொழுதுபோக்கு (Recreation) என்பதாகும்.மேலே குறிப்பிட்டதை போல கி.பி. 9ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சேந்தன் திவாகரம், கி.பி. 10ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட பிங்கலம், கி.பி. 14ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட உரிச்சொல் நிகண்டு, கி.பி. 16ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட சூடாமணி நிகண்டு முதலிய நூல்களில் பல்வேறு விளையாட்டுகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. தமிழ் பாரம்பரிய விளையாட்டு வாழ்க்கைக்குக் களமாகவும், இன்பம் விளைவிக்கும் ஆட்டமாகவும் இருந்துள்ளன.

**சங்க இலக்கியத்தில் விளையாட்டுகள்**

சங்க இலக்கியம் என்பது முழுமையும் சூழலை, நிகழ்வுகளை மையமிட்ட படைப்பாக்கம் எனலாம். தமிழ் செவ்வியல் நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்றும் பதினெண் மேற்கணக்கு நூல்கள் என்று அழைக்கப்படுகின்ற சங்க இலக்கிய நூல்களில் **43 வகையான விளையாட்டுகள்** பற்றி ஆய்வில் அறியப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு:

1. *அசதியாடல்*
2. *அம்புலி அழைத்தல்*
3. *அலவன் ஆட்டல்*
4. *உலாவல்*
5. *ஊசல்*
6. *எண்ணி விளையாடல்*
7. *எதிரொலி கேட்டல்*
8. *ஏறு கோள்*
9. *ஓரை*
10. *கண் புதைந்து ஒளிந்தாடல்*
11. *கவண்*
12. *கழங்கு*
13. *குதிரை ஏற்றமும் யானை ஏற்றமும்*
14. *குரவை*
15. *குறும்புக் விளையாட்டு*
16. *கூடலிழைத்தல்*
17. *சாம விளையாட்டு*
18. *சிறுசோறு*
19. *சிறுதேர்*
20. *சிறுபறை*
21. *சிற்றில் செய்தல்*
22. *சுண்ண விளையாட்டு*
23. *சூது*
24. *செடி, கொடி வளர்ப்பு*
25. *நீர் விளையாட்டு*
26. *பண்ணை விளையாட்டு*
27. *பந்து விளையாட்டு*
28. *பறவைகளைக் காணலும், அவற்றின் செயல்கள் போல் செய்தலும்*
29. *பறவை வளர்ப்பும், விலங்கு வளர்ப்பும்*
30. *பறவை, விலங்குகளுடன் விளையாடல்*
31. *பறவை, விலங்குப் போர்*
32. *பாவை விளையாட்டு*
33. *பாண்டி விளையாட்டு*
34. *பிசி விளையாட்டு*
35. *புள் ஓட்டல் (அ) ஆயலோட்டல்*
36. *மலர் கொய்தலும், மாலை தொடுத்தலும்*
37. *மல் விளையாட்டு*
38. *முரண்களரி*
39. *வண்டலிழைத்தல்*
40. *வட்டாடல்*
41. *வள்ளை*
42. *வில் விளையாட்டு*
43. *வேட்டை (தமிழ் இலக்கியங்களில் விளையாட்டு கூறுகள். பக். எ: 27-28)*

மேலே சொல்லப்பட்ட சங்க கால விளையாட்டுகள் ஆண்கள் விளையாட்டுகள், பெண்கள் விளையாட்டுகள், இருபாலர் விளையாட்டுகள் என்றும் உள் விளையாட்டுகள், வெளி விளையாட்டுகள், உள்-வெளி விளையாட்டுகள் என்றும் ஒவ்வொரு விளையாட்டின் விளக்கங்களிலும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

**காப்பிய இலக்கியத்தில் விளையாட்டுகள்**

சங்க இலக்கியத்திற்குப் பின்னர் வந்த இலக்கிய வகைகளில் காப்பியங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. காப்பியங்கள் ஒரு கதையை மையமாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளன. வகைமை அடிப்படையில் இதிகாசம், பெருங்காப்பியம், சிறுகாப்பியம், புராணங்கள் என வகைப்படுத்துவர். இப்படிச் சிறப்புப் பெற்ற காப்பியங்களில் விளையாட்டுகள் சொல்லப்பட்டுள்ளன. காப்பிய நிலையைச் சொல்லும் இலக்கண நூலான தண்டியலங்காரம் விளையாட்டினை முன்னிறுத்துகின்றன. இதனை, பூம்பொழில் நுகர்தல் புனல் விளையாடல் என்ற வரிகளால் உணரலாம். காப்பிய இலக்கியத்தில் 53 விளையாட்டுகள் காணப்படுகின்றன. அவை:

1. *அசதியாடல்*
2. *அம்புலிஅழைத்தல்*
3. *அம்மானை*
4. *அலவன்ஆட்டல்*
5. *இடுதேடிடல்*
6. *உயிரால்பற்றல் உருவம்கிள்ளல்*
7. *உலாவல்*
8. *ஊசல்*
9. *எண்ணிவிளையாடல்*
10. *எதிரொலிகேட்டல்*
11. *ஏறுகோள்*
12. *கண்புதைந்துஒளிந்தாடல்*

*13. கருவுற்றபெண்போல் நடித்தல்*
*14. கவண்*
*15. கள்வர்-காப்பவர்-மறிகள்போல் நடித்தல்*
*16. கழங்கு*
*17. கறங்கு*
*18. குதிரையேற்றமும்யானையேற்றமும்*
*19. குரவை*
*20. குறும்புவிளையாட்டு*
*21. சம்பங்கோறைகொண்டுவிளையாடல்*
*22. சாமவிளையாட்டு*
*23. சிலம்பம்*
*24. சிற்றில்செய்தல்*
*25. சிறுசோறு ஆக்கல்*
*26. சிறுதேர்*
*27. சிறுபறை*
*28. சுண்ணம்தூவலும்சுண்ணம்உழற்சியும்*
*29. சூது*
*30. செடிகொடிவளர்ப்பு*
*31. செண்டாடல்*
*32. தோள்வீச்சு*
*33. பம்பரம்*
*34. பட்டம்*
*35. படகுவிளையாட்டு*
*36. பந்தாடல்*
*37. பறவை, விலங்குகள் போல் செய்தல்*
*38. பறவை, விலங்குப்போர்*
*39. பறவை, விலங்குவளர்ப்பு*
*40. பறவை விலங்குவிளையாட்டு*
*41. பாவைவிளையாட்டு*
*42. பிசி-நொடிவிளையாட்டு*
*43. புள்ஓட்டல்*
*44. மல்*
*45. மலர்கொய்தலும் மாலைதொடுத்தலும்*
*46. முரண்களரி*
*47. நீர்விளையாட்டு*
*48. வண்டலிழைத்தல்*
*49. வட்டு*
*50. வள்ளை*
*51. வில்விளையாட்டு*
*52. வேட்டை*
*53. வேள்விச்சடங்குகள்செய்தல்*

*(தமிழ் இலக்கியங்களில் விளையாட்டுக் கூறுகள். பக்.எண்: 71-72)*

மேலே சொல்லப்பட்ட விளையாட்டுகள் காப்பிய கால மக்கள் வாழ்க்கையில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தமையை அறியமுடிகின்றது.

**பக்தி இலக்கியத்தில் விளையாட்டுகள்**

கி.பி. 600 முதல் 900 வரை உள்ள காலத்தைப் பக்தி இலக்கியக் காலமென்றும் தமிழ் இலக்கிய வரலாற்று நூலாசிரியர்கள் சான்றுபகர்கின்றனர். இக்காலக் கட்டத்தில் மனிதனின் செயல்கள் அனைத்தும் கடவுள் செயல் எனப் பக்தி சார்ந்த நிலையிலேயே பேசப்பட்டும், எழுதப்பட்டும் வந்துள்ளமையை அறிய முடிகின்றது. பக்தி இலக்கியக் காலகட்டத்தில் விளையாட்டுக்கலைகளும் கோயிலைச்சார்ந்து சமயம் வளர்க்கப் பயன்பட்டன என்றால் மிகையாகாது. பக்தி இலக்கிய காலத்தில் தோன்றிய விளையாட்டுகள் 32 வகைகள் என ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். அவை:

1. *அம்புலிஅழைத்தல்,*
2. *இடுதேடிடல்*
3. *எதிரொலிகேட்டல்*
4. *ஏனல்*
5. *ஏறுகோள்*
6. *கழங்கு*
7. *கறங்கு*
8. *கித்தி*
9. *குறும்புவிளையாட்டு*
10. *குரவை*
11. *கூடலிழைத்தல்*
12. *சிறுசோறாக்கல்*
13. *சிற்றில்அமைத்தல்*
14. *சிறுதேர்*
15. *திருவம்மானை*
16. *திருப்பொற்சுண்ணம்*
17. *திருவுந்தியப்பறத்தல்*
18. *திருக்கோத்தும்பி*
19. *திருத்தெள்ளேணம்*
20. *திருச்சாழல்*

21. *திருப்பூவல்லி*
22. *திருத்தோணோக்கம்*
23. *திருப்பொன்னூசல்*
24. *திருவெம்பாவை, திருப்பாவை*
25. *நீர்விளையாட்டு*
26. *பந்தாடல்*
27. *பறவை, விலங்குவிளையாட்டு*
28. *பாவை*
29. *மல்*
30. *வண்டலிழைத்தல்*
31. *வள்ளை*
32. *வில்*

*(தமிழ் இலக்கியங்களில் விளையாட்டுக் கூறுகள். பக்.எண்: 98-99)*

பழந்தமிழர் தம் விளையாட்டுகள் பக்தி இயக்கக் காலத்தில் தெய்வீகமயமாக்கப்பட்டுள்ளது. அரசன், மறவன், தலைவன், தலைவி சார்ந்த நிலை மாறி விளையாட்டிலும், விளையாட்டு சார்ந்த பாட்டிலும் இறைவன், இறைவியர் தம் திருவிளையாடல்கள் ஏற்றிப்போற்றி உரைக்கும் இயல்பைக் காணமுடிகின்றது.

**சிற்றிலக்கியத்தில் விளையாட்டுகள்**

கி.பி. 1500 முதல் 1700 வரையிலான நாயக்கர் காலத்தைச் சிற்றிலக்கியக் காலமென்பர் தமிழ் இலக்கிய வரலாற்றாளர்கள். சிற்றிலக்கியங்கள் 96 வகையுள் அடங்குமென இலக்கணம் வகுத்துள்ளனர். ஆனால் விளையாட்டு பற்றிய செய்திகளை ஒரு சில சிற்றிலக்கிய நூல்களில் இருந்து மட்டும் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. அவை 35 வகைகள் ஆகும்.

1. *அம்மானை*
2. *அம்புலிஅழைத்தல்*
3. *உலாவல்*
4. *ஊசல்*
5. *ஏறுதழுவல்*
6. *கண்மூடிவிளையாடல்*
7. *கழங்கு*
8. *குரவை*
9. *குறும்புவிளையாட்டு*
10. *கூடல்சுழி*
11. *கைதட்டிவிளையாடல்*
12. *சிற்றில்செய்தல்*
13. *சிறுசோறு ஆக்கல்*
14. *சிறுபறை*
15. *சிறுதேர்*
16. *சுண்ணம்விளையாட்டு*
17. *சூது*
18. *சொல்விளையாட்டு*
19. *தளிர்களை அறுத்துவிளையாடல்*
20. *பம்பரம்*
21. *பந்துவிளையாட்டு*
22. *படகுவிளையாட்டு*
23. *கோழிப்போர்*
24. *பறவை விலங்குவிளையாட்டு*
25. *பாவை*
26. *பாரிவேட்டை*
27. *புழுதிவிளையாட்டு*
28. *மற்போர்*
29. *மீன்பிடித்துவிளையாட்டு*
30. *முத்தெறிந்துவிளையாடல்*
31. *நீர்விளையாட்டு*
32. *வள்ளை*
33. *வல்லைய் (வல்லி)*
34. *வாள்வீச்சு*
35. *வேட்டை*

*(தமிழ் இலக்கியங்களில் விளையாட்டுக் கூறுகள். பக்.எண்: 129)*

சிற்றிலக்கியங்களில் சிறுவர் விளையாட்டுகளும், மகளிர் விளையாட்டுகளுமே பெரும்பாலும் இடம்பெறுவதைக் காணமுடிகிறது.

**இக்கால இலக்கியத்தில் விளையாட்டுகள்**

15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிய இக்காலத்தை உலக மறுமலர்ச்சிக் காலம் எனலாம். இக்காலத்தில் தமிழ் மக்களிடையே புதுமைகள் புகுந்தன. அதேபோல தமிழ் மொழி இலக்கியத்திலும் மாற்றங்கள் தோன்றின. இக்காலகட்டத்தில் தமிழ் மொழியில் தோன்றிய இலக்கியங்களை இக்கால இலக்கியங்கள் என்று இலக்கிய

வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். புதுமையில் தோன்றிய இக்கால இலக்கியங்களில் 39 வகையான விளையாட்டுகள் சொல்லப்பட்டுள்ளது என்று ஆய்வாளர் குறிப்பிடுகின்றார். அவை:

1. *அசதியாடல்*
2. *அம்புலியழைத்தல்*
3. *ஆடுபுலிஆட்டம்*
4. *உலாவல்*
5. *ஊஞ்சல்*
6. *ஏணிவிளையாட்டு*
7. *ஒத்தையா? இரட்டையா?*
8. *ஓடாக்குதிரை*
9. *ஓடிப்பிடிக்கும்புறாவிளையாட்டு*
10. *ஓடிவிளையாட்டு*
11. *கண்ணாமூச்சி*
12. *கழங்கு*
13. *காகிதக்கப்பல்*
14. *கில்லி*
15. *குறும்புவிளையாட்டு*
16. *கும்மி*
17. *குழந்தை நடைபழகிவிளையாடுதல்*
18. *குறுக்கெழுத்துப்போட்டி*
19. *குதிரைவிளையாட்டு*
20. *கொலைகொலையாகுந்திரிஃகா*
21. *கோலி*
22. *சடுகுடு*
23. *சிற்றில்*
24. *சிறுதேர்*
25. *சூது*
26. *தட்டாங்கல்*
27. *சிறுசோறு*
28. *நாடுபடிக்கும் விளையாட்டு*
29. *நீர்விளையாட்டு*
30. *பல்லாங்குழி*
31. *பறவை, விலங்குவிளையாட்டு*
32. *பந்து*
33. *பட்டம்*
34. *பிசிவிளையாட்டு*
35. *பூப்பறித்தலும் தொடுத்தலும்*
36. *பொம்மை*
37. *மட்டைப்பந்தாட்டம்*
38. *வில்*
39. *வேட்டை*

*(தமிழ் இலக்கியங்களில் விளையாட்டுக் கூறுகள். பக். எண்: 155-156)*

இக்கால விளையாட்டுகள் வரையறுக்கப்பட்ட விதிமுறைகள் உருவாக்கப் பெற்றுப் பன்னாட்டுத் தொழில்நுட்பங்களும், நுணுக்கங்களும் சேர்க்கப்பட்டு உலகப் பொதுத்தன்மையைப் பெறுகின்றன.

**நாட்டுப்புற இலக்கியத்தில் விளையாட்டுகள்**

உலக இலக்கியங்களில் எழுத்திலக்கியம் தோன்றுவதற்கு முன்பே வாய்மொழி இலக்கியம் தோன்றியிருத்தல் வேண்டும் என்பர் இலக்கிய வரலாற்றாளர். நாட்டுப்புற விளையாட்டுகள் அவ்வப்பகுதி மண்ணிற்குரிய தனித்தன்மையுடன் விளங்குகின்றன. அவை பெரும்பாலும் ஏதேனும் ஒரு பயன் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. உடல் திறன் பேணுதல், கேள்வி அறிவினை வளர்த்தல், கற்பனை ஆற்றலைப் பெருக்குதல், அறிவுத் திறனை மேம்படுத்துதல், நடிப்பாற்றலை உருவாக்குதல், என்றவாறு விளையாட்டின் பயன் மதிப்பு மிகுதியாகும். இப்படிச் சிறப்புப்பெற்ற நாட்டுப்புற இலக்கியத்தில் 28 விளையாட்டுகள் பற்றி விளக்கப்பட்டள்ளன. அவை:

1. *ஆடுபுலிஆட்டம்*
2. *இளவாட்டம்*
3. *உருண்டைதிரண்டை*
4. *உறிபானைவிளையாட்டு*
5. *உறிமரம்ஏறுதல்*
6. *கண்ணாம்பொத்தி*
7. *கிட்டிப்புள்*
8. *குண்டுவிளையாட்டு*
9. *குலைகுலையாகுந்திரிஃகாய்*
10. *ஜல்லிக்கட்டு*
11. *சடுகுடு*
12. *சிற்றில்செய்தல்*
13. *சிலம்பம்*

*14. சூ-விளையாட்டு*

*15. சூது*

*16. தட்டாங்கல்*

*17. தாயகம்*

*18. நான்கு*

*19. நொண்டி*

*20. பம்பரம்*

*21. பச்சைக்குதிரை*

*22. பல்லாங்குழி*

*23. பகூஞ்சி, பாரிவேட்டை, குதிரைஎடுப்பு*

*24. பூப்பறிக்கவருகிறோம்*

*25. மஞ்சள்நீர் தெளித்தல்*

*26. மாட்டுவண்டிப்பேட்டி*

*27. ராஜாமந்திரி*

*28. வில்-குண்டு விளையாட்டு*

*(தமிழ் இலக்கியங்களில் விளையாட்டுக் கூறுகள். பக். எண்: 191-192)*

நாட்டுப்புற விளையாட்டுகள் மனமகிழ்ச்சி, அறிவாற்றல், கூட்டுறவு ஆகியவற்றை வளர்க்கின்றன. சிறுவர்களுக்கு மட்டுமன்றிப் பெரியவர்களுக்கும் மனமகிழ்ச்சியைத் தரக் கூடியதாகவும், அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற விளையாட்டுகள் இருப்பதைக் காணமுடிகின்றது.

**முடிவுரை**

மேலே குறிப்பிடப்பட்ட விளையாட்டுகளின் வகைப்பாடுகள் அனைத்தும் அந்தந்தக் காலத்தில் தோன்றிய விளையாட்டுகள் ஆகும். இவைகள் செய்யுள் வடிவிலும் உரைவடிவிலும் கிடைத்த செய்திகளைக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியங்களில் விளையாட்டுக் கூறுகள் என்ற ஆராய்ச்சி நூலி முனைவர். த. மலையரசி அவர்கள் ஒவ்வொரு விளையாட்டுகளின் விதிமுறைகளையும், விளக்கங்களையும் அழகாக விளக்கியுள்ளார். இன்று தமிழ்நாடு அரசும், விளையாட்டுகள் சார்ந்த அமைப்புகளும் விளையாட்டில் தனிக்கவனம் செலுத்தி வருகின்றன. விளையாட்டு கல்விக்கூடங்களில் தனிப்பாடமாகக் கற்பிக்கப்படுகின்றது. மக்களிடம் விளையாட்டு உணர்வை வளர்த்து உலக நாடுகளுக்கு இடையான விளையாட்டுப் போட்டிகளாகப் பல விதிமுறைகளைக் கொண்டு மலர்த்தியுள்ளன. “வான்புகழ் கொண்ட தமிழ்நாடு” என்ற பாரதியாரின் கூற்றிற்கு இணங்க தமிழ் மொழி விளையாட்டிற்கு விதையாக இருந்தள்ளது என்பதை கட்டுரை மூலமாக அறியலாம்.

**துணைநூற் பட்டியல்**

1. ஐயனாரிதனார், புறப்பொருள் வெண்பாமாலை, உரை - புலியூர்க் கேசிகன், சாரதா பதிப்பகம், சென்னை - 600002. முதல் பதிப்பு: 1895
2. தமிழ் லெக்சிகன் (தமிழ் பேரகராதி), தொகுதி VI, பகுதி – I, பக்கம். 3730, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை – 600005, முதல் பதிப்பு: 1924-1939
3. பாரதியார் கவிதைகள், விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர் – 641001, இரண்டாம் பதிப்பு: மார்ச் 2019
4. மலையரசி, தமிழ் இலக்கியங்களில் விளையாட்டுக் கூறுகள், பாவை பதிப்பகம், மதுரை – 625001. முதல் பதிப்பு: 1994